2013 மே 7]

குடகனாறு அணைதான். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த அணையைத் தூர் வாரி, கொள்ளளவை அதிகப்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதோடு அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா' என்பார்கள். ஆனால், கேட்காமலே கொடுக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கவனத்திற்கு உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, உடனடியாக அணையைத் தூர் வாருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை நினைத்தவுடன் நிறைவேற்றித் தரும் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்திற்கு எடுத்துச்செல்ல உடனடியாக உத்தரவிட்டதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் பொற்பாதங்களில் என்னுடைய தொகுதி மக்களின் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 419, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

419—

கால்நடை மருத்துவமனை

***7493**—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு கால்நடை மருந்தகம் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், அங்கே தினந்தோறும் சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை அறுபதாக இருக்கவேண்டும். ஆனால், உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற பத்மநாபபுரம் தொகுதி, குலசேகரத்திலே உள்ள கால்நடை மருந்தகத்திற்கு ஒரு நாளைக்கு 28—லிருந்து 30 கால்நடைகள் வரைதான் சிகிச்சைக்காக வந்துகொண்டிருக்கின்றன. எனவே, அந்த மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 420, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

420—

பாலம் கட்டுதல்

***23965—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஆவாலூர், செலம்பை மற்றும் தேக்கனாம்பட்டி ஆகிய மலைக் கிராமங்களின் குறுக்கே செல்லும் ஆறுகளின் நடுவே பாலங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?